# பொதுப்பணித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024–2025

### மானியக் கோரிக்கை எண். 39

## எ.வ. வேலு
## பொதுப்பணித் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2024

**பொருளடக்கம்**


| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1.0 | முன்னுரை | 1 |
| 2.0 | நிதி ஒதுக்கீடு 2024–2025 | 6 |
| 3.0 | அரசு கட்டடங்கள் பராமரிப்பு | 8 |
| 4.0 | கலைஞர் நூற்றாண்டு கட்டுமானப் பணிகள் | 10 |
| 5.0 | சிறப்புத் திட்டங்கள் (Iconic Projects) | 15 |
| 6.0 | பாரம்பரிய கட்டடங்கள் பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறு சீரமைத்தல் பணிகள் | 17 |
| 7.0 | நினைவகங்கள் மற்றும் மணிமண்டபங்கள் | 19 |
| 8.0 | துறை வாரியான கட்டடப் பணிகள் | 20 |
| 9.0 | முடிவுரை | 68 |

## 1.0 முன்னுரை

**"நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே;**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;**
**அதனால், யான் உயிர் என்பது அறிகை**
**வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே"**.

– மோசி கீரனார்
இயற்றிய புறநானூற்றுப் பாடல்.

உலக உயிர்களைக் காப்பது நெல்லும் நீரும் மட்டும் அன்று; பரந்த இவ்வுலகம் வேந்தனின் முறையான காவல் சிறப்பாலேயே செவ்விதமாக நிலைபெறுவதனால், அரசனே உண்மையாக உலகுக்கு உயிர் ஆவான். அதனால், வேலாள் மிக்க படையுடைய வேந்தன் 'தானே உலக நல்வாழ்வின் உயிர்ப்பாக விளங்க வேண்டுபவன்' என உணர்ந்து, அதற்கேற்ப மக்களைப் பேணி நடப்பதே கடமையாகும். இப்பாடல் வரிகளுக்கேற்ப, நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நியாயமான மற்றும் நேர்மையான நிர்வாகத்தின் மூலம் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட சீரிய முயற்சி மேற்கொண்டு வருகிறார்.

முதலமைச்சரின் இச்சீரிய முயற்சிக்கு உறுதுணையாக, பொருளாதார மேம்பாடு மற்றும் மாநில மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு, கட்டமைப்புகளை உருவாக்கும் பொறுப்பினைப் பொதுப்பணித் துறை ஏற்றுச் செயலாற்றி வருகிறது.

**"அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றுந் திறனறிந்தான் தேர்ச்சித் துணை"**

அரசின் தொலைநோக்குப் பார்வைக்கேற்ப, இத்துறை நல்ல கட்டமைப்புப் பணிகளை கருத்தியல்ரீதியாக உருவாக்கி வருகிறது. பிற துறைகளின் தேவைக்கேற்ப கட்டடங்களை உருவாக்கி வருகிறது. இக்கட்டுமானங்கள் அனைத்தும் அனைத்து விதிகளையும் பின்பற்றி உறுதித்தன்மையுடன் திட்டமிடப்பட்டு அழகுணர்வுடன் விளங்குகின்றன.

அரசுக் கட்டடங்களின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பின் அத்தியாவசியத்தை உணர்ந்து தமிழ்நாட்டில் பிரத்தியேகமாகப் பொதுப்பணித் துறை 1858–இல் உருவாக்கப்பட்டு, கடந்த 165 ஆண்டுகளுக்கும் மேலாக மிகப்பழைமையான சேவைத் துறையில் ஒன்றாக விளங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பொறியியல் துறைகளுக்கும் முன்னோடியாக விளங்கும் பொதுப்பணித் துறையானது, தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் திறமை கொண்ட மனித வளத்துடன் பொதுக் கட்டமைப்புகளை உருவாக்கிப் பராமரித்து வருகிறது.

இத்துறையின் மூலம் மக்களுக்குத் தேவையான பொதுக் கட்டடங்களான அரசு மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகள், பள்ளிக் கட்டடங்கள், நீதிமன்றங்கள், வருவாய்த் துறை, வணிகவரித் துறை, போக்குவரத்துத் துறை, பதிவுத் துறை உள்ளிட்ட துறைகளுக்கான அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

பாரம்பரிய கட்டடங்களின் பெருமையினை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் வண்ணம் இக்கட்டடங்கள் அறிவியல் முறைப்படி புனரமைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

புதிய கட்டுமானப் பொருள்களைக் கொண்டு நவீனத் தொழில் நுட்பத்துடன், இந்தியத் தர நிர்ணயக் கழகம்,

தேசியக் கட்டுமானக் குறியீடுகள் மற்றும் இதர தகுந்த குறியீடுகளை பின்பற்றி கட்டுமானப் பணிகளை இத்துறை திறம்பட செயல்படுத்தி வருகிறது. மாற்றுத் திறனாளிகள் நலன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மின் சேமிப்பு ஆகியவற்றை உள்ளடக்கி பொதுக் கட்டடங்கள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

துறையின் அனைத்து அலுவலக நடைமுறைகளான மதிப்பீடு தயாரித்தல், ஒப்பந்தம் கோருதல், கட்டட வேலைகளைக் கண்காணித்தல், பணப் பட்டியல் தயாரித்தல் போன்ற அனைத்து நடைமுறைகளும் செயல்திறன் மற்றும் எளிதாக வேலை செய்வதை உறுதி செய்வதற்காக கணினி மயமாக்கப்பட்டுள்ளன.

"**தரமே தாரக மந்திரம்**" என்ற கோட்பாட்டுடன் இயங்கி வரும் பொதுப்பணித் துறையால் கட்டப்பட்டு வரும் அனைத்துக் கட்டடங்களும் உயர்ந்த தரத்துடனேயே கட்டப்பட்டு வருகின்றன. எனினும், தரத்தினை மீண்டும் உறுதி செய்யும் வண்ணம் தரக்கட்டுப்பாட்டுக் கோட்டங்கள் பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டு,

ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு கோட்டம் வீதம் 4 கோட்டங்கள் இயங்கி வருகின்றன. இக்கோட்டங்கள் மூலம் அனைத்துப் பணித்தளங்களிலும் கள ஆய்வும், உரிய பரிசோதனைகள் தரக் கட்டுப்பாட்டு பொறியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு, குறைகள் ஏதும் இருப்பின் அவை உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

கட்டடங்களை, அதற்கான தேவையைப் பூர்த்தி செய்யும் விதத்தில் அழகுணர்வுடன் கட்டும் பொருட்டு பிரத்தியேக பிரிவுகளான திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம், கட்டடக்கலைப் பிரிவு, மின் கோட்டங்கள், தரக்கட்டுப்பாட்டுக் கோட்டங்கள் மற்றும் கட்டட மையம் மற்றும் பாதுகாப்புக் கோட்டங்கள் உருவாக்கப்பட்டு அனைத்தும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றன.

இயற்கை பேரிடர் நிகழ்வுகளின்போது இத்துறை துரிதமாகச் செயல்பட்டு, மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் மருத்துவமனைகள் உள்ளிட்ட

முக்கியமான கட்டடங்களில், சேதமடைந்த கட்டமைப்புகளில் உடனடியாக மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொண்டு தொடர்ந்து செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மிக முக்கிய விருந்தினர் வருகையின்போது தேவையான ஏற்பாடுகளை மேற்கொண்டு, அரசு விழாக்கள் தடையின்றி நடைபெற அனைத்து வகையிலும் திறம்படப் பொதுப்பணித் துறை செயலாற்றி வருகின்றது.

## 2.0 2024–2025 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

2024–2025 ஆம் நிதியாண்டில் பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கை எண் 39ன் கீழ் ரூ.1795.58 கோடி நிதி ஒதுக்கீட்டில் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன:–

| வ எண் | பொருள் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | மூலதனக் கணக்கு | |
| | (அ) மூலதனப் பணிகள் | 1227.25 |
| | (ஆ) கணக்குகளிடையே மாற்றம் | 133.10 |
| 2 | வருவாய் கணக்கு | |
| | (அ) பராமரிப்பு | 165.33 |
| | (ஆ) பணியமைப்பு (பொதுப்பணித் துறை தலைமைச் செயலகம் உட்பட) | 269.40 |
| 3 | கடன் கணக்கு | 0.50 |
| | மொத்தம் | **1795.58** |

## 2.1 துறை வாரியான ஒதுக்கீடு 2024–2025

### 2.1.1 மூலதனப் பணிகள்

| வ. எண் | துறையின் பெயர் | 2024–2025 வரவு செலவு திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 | உள் (நீதி மற்றும் சட்டம்) துறை | 201.75 |
| 2 | நினைவகங்கள் | 84.28 |
| 3 | பதிவுத் துறை | 120.29 |

| | | |
|---|---|---|
| 4 | பாரம்பரிய கட்டடங்களைப் பாதுகாத்தல் | 124.20 |
| 5 | பிற துறைகள் | 19.97 |
| 6 | பொதுத் துறை–தமிழ்நாடு இல்லம், புது டில்லி | 207.00 |
| 7 | பொதுப்பணித் துறை | 252.19 |
| 8 | மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் துறை | 8.78 |
| 9 | வணிகவரித் துறை | 17.18 |
| 10 | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | 191.61 |
| | மொத்தம் | **1227.25** |

## 3.0 அரசுக் கட்டடங்கள் பராமரிப்பு

### 3.1 பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான கட்டடங்கள்

பொதுப்பணித் துறை கட்டடங்கள் மானிய கோரிக்கை எண்.39ன்கீழ் 2024-2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மாண்புமிகு அமைச்சர்களின் அரசு மாளிகைகள், ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகள், பொதுப்பணித் துறை அலுவலகங்கள் மற்றும் அரசு அலுவலர் குடியிருப்புகள் ஆகியவற்றின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளை

மேற்கொள்ள ரூ.165.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.2 இதர துறைகளின் கட்டடங்கள்

ஆளுநர் மாளிகை, தலைமைச் செயலகம், உயர்நீதிமன்றம், மாவட்ட மற்றும் சார்பு நீதிமன்றக் கட்டடங்கள், உயர்நீதிமன்ற நீதியரசர்கள் வசிக்கும் அரசு மாளிகைகள், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடங்கள், மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகள், ஆரம்ப மற்றும் துணை சுகாதார நிலையங்கள், பள்ளிகள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை மற்றும் பதிவுத் துறை ஆகியவற்றின் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் பிற அரசுக் கட்டடங்களின் பராமரிப்பு, பழுதுபார்க்கும் பணிகளுக்காக 2024–2025–ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.584.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.0 முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழா பணிகள்

### 4.1 முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு நூலகம்

3.6.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி மதுரையில் ரூ.120.75 கோடி மதிப்பீட்டில் **முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நினைவு நூலகம்** கட்டப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.7.2023 அன்று மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் மற்றும் இதர அமைச்சர்கள் முன்னிலையில் இந்நூலகம் திறந்து வைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

இப்பிரம்மாண்டமான நூலகக் கட்டடம் 2,00,250 சதுரடி பரப்பளவில் தரைத் தளம் மற்றும் ஆறு தளங்களைக் கொண்டது. இந்நூலகம் சமூகத்தின் அனைத்து பிரிவினருக்கும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய நல்ல கற்றல் சூழலை உருவாக்கும் விதமாக உள்ளது. இந்நூலகத்தில் அரிய புத்தகங்கள் பிரிவு, போட்டித்

தேர்வு புத்தகங்கள் பிரிவு, குழந்தைகள் புத்தகங்கள் பிரிவு, டிஜிட்டல் நூலகம், பார்வையற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்புப் பிரிவு எனப் பல்வேறு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. மின்தூக்கி, நகரும் படிகட்டுகள் மற்றும் சாய்தளம் போன்ற வசதிகள், வயதானவர்கள், குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நூலகக் கட்டடத்தின் அனைத்துத் தளங்களையும் அணுகுவதை எளிதாக்குகிறது.

## 4.2 கலைஞர் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, கிண்டி, சென்னை

3.6.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி சென்னை, கிண்டி, கிங் நோய்த் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் கலைஞர் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டப்பட்டு, 15.6.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்

திறந்து வைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

இம்மருத்துவமனை ரூ.240.53 கோடி மதிப்பீட்டில் சுமார் 4.89 ஏக்கர் நிலப்பரப்பில் தரைத்தளம் மற்றும் ஆறு தளங்களுடன் கூடிய 51,429 சதுர மீட்டர் பரப்பளவில் 1000 படுக்கைகள், 175 தீவிர சிகிச்சை படுக்கைகள், 15 அறுவை சிகிச்சை அறைகள் CT, MRI போன்ற அனைத்து வசதிகளுடன் மூன்று கட்டடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. முதல் கட்டடத்தில் வெளிநோயாளிகள் பிரிவும், இரண்டாம் கட்டடத்தில் தீவிர சிகிச்சை பிரிவும் மூன்றாம் கட்டடத்தில் அறுவை சிகிச்சை பிரிவும் அமைக்கப்பட்டுள்ளது.

## 4.3. கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்

மதுரை மாவட்டம், கீழக்கரை கிராமத்தில் ஜல்லிக்கட்டு அரங்கம் கட்டப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 21.1.2022 அன்று அறிவித்தார்கள். அதன்படி, மதுரை மாவட்டம்,

கீழக்கரை கிராமத்தில் ரூ.62.78 கோடி மதிப்பீட்டில் 66 ஏக்கர் நிலப்பரப்பில் ஜல்லிக்கட்டு அரங்கம் கட்டும் பணி நிறைவடைந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.1.2024 அன்று **"கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்"** திறந்து வைக்கப்பட்டு, முதல் ஏறுதழுவுதல் நிகழ்ச்சி கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டது.

இவ்வரங்கத்தில் முதன் முறையாக 482 காளைகள் மற்றும் 259 காளையை அடக்கும் வீரர்களுக்குப் போட்டி நடத்தப்பட்டது. இதில் 19 மாவட்டங்களிலிருந்து காளைகள் மற்றும் வீரர்கள் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற வீரர்கள் மற்றும் காளைகளுக்குப் பல்வேறு பரிசுகள் வழங்கப்பட்டன.

ஜல்லிகட்டு அரங்கம் **4500** பேர் அமரும் வகையிலும், அருங்காட்சியகம், முக்கிய பிரமுகர்கள் அறைகள், போட்டியாளர்கள் தங்கும் அறைகள், கால்நடை மருந்தகம், காளை கொட்டகை (2 எண்ணம்), வாடிவாசல் அருகே காளைகள் நிற்கும் இடம், துணை

சுகாதார மையம், ஆண்கள் மற்றும் பெண்கள் ஒப்பனை அறை (தலா 2 எண்ணம்), நுழைவு வாயில், அணுகு சாலை, கேபிள் குழாய் மற்றும் வடிகால், புல்வெளி மற்றும் தோட்டம், தடுப்புச் சுவர், புற சுகாதார ஏற்பாடுகள், தீயணைப்பு ஏற்பாடுகள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் மோட்டார் அறை, ஒளிவிளக்குகளின் ஏற்பாடுகள் போன்ற அனைவருக்கும் தேவையான அடிப்படை மற்றும் அத்தியாவசிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

### 4.4. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம் அமைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களுக்கு நினைவிடம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24.8.2021 அன்று அறிவித்தார்கள். அதன்படி சென்னை காமராஜர் சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா நினைவக வளாகத்தில் 2.21 ஏக்கர் பரப்பில் நினைவிடம் ரூ.53.73 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள்

முடிவுற்று இந்நினைவகம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 26.2.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்நினைவிட வளாகத்தில் அமைந்துள்ள **'கலைஞர் உலகம்'** எனும் அருங்காட்சியகம் நாட்டின் உயரிய தலைவராகக் கருதப்படும் கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் சாதனைகளை விளக்கும் வகையில் ரூ.47.75 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

## 5.0 சிறப்புத் திட்டங்கள் (Iconic Projects)

### 5.1 சென்னை நந்தனத்தில் எம்.சி.ராஜா விடுதி வளாகத்தில் புதிய மாணவர் விடுதி கட்டும் பணி

சென்னை நந்தனத்தில் உள்ள எம்.சி.ராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் நவீன வசதிகளுடன் ரூ.44.50 கோடி செலவில் தரைத் தளம் மற்றும் 10 தளங்களில் 121 அறைகளுடன் 484 மாணவர்கள் தங்கும் வகையில் புதிய மாணவர் விடுதி கட்டடம் கட்டும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

## 5.2. சென்னை வள்ளுவர் கோட்டம் புனரமைப்புப் பணிகள்

வள்ளுவர் கோட்டம் முழுவதும் திராவிடக் கலாச்சாரம் மற்றும் கட்டடக் கலையைப் பிரதிபலிக்கும் வகையில் 1974–1976–ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டது. வள்ளுவர் கோட்டத்தினை மறுசீரமைக்கும் பணி ரூ.80.00 கோடி மதிப்பீட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தனித்துவம் வாய்ந்த நவீன குளிரூட்டும் வசதிகளுடன் கூடிய கலையரங்கம் சமூக மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெறும் வகையில் வள்ளுவர் கோட்ட வளாகம் புனரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வளாகத்தில் திருக்குறளின் பெருமையை வெளிப்படுத்தும் வகையில் அருங்காட்சியகம், புல்வெளியுடன் கூடிய தோட்டம், நூலகம், கருத்தரங்கு அறை, ஒலி–ஒளி காட்சி, உணவகம் மற்றும் பொதுமக்களுக்கான பிற வசதிகளுடன் கலையரங்கம் நவீன முறையில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

## 6.0 பாரம்பரிய கட்டடங்களை பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைத்தல் பணிகள்

பாரம்பரிய கட்டடங்களின் வரலாறு, கட்டடக் கலை, கலாச்சாரம் மற்றும் தோற்றப் பொலிவினை பாதுகாப்பதன் மூலம் வருங்கால தலைமுறையினர் அதிலிருந்து அறிந்து கொள்ள ஏதுவாகும்.

பாரம்பரியக் கட்டடங்களை அதன் தொன்மை மாறாமல் அறிவியல் முறைப்படி **பாதுகாத்தல்**, **புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைத்தல் பணிகளைப் பொதுப்பணித் துறையின்** கட்டட மையம் மற்றும் பாதுகாப்புக் கோட்டம் மேற்கொண்டு வருகிறது.

பாரம்பரியமிக்க கட்டடங்களான சென்னை சேப்பாக்கத்தில் உள்ள ஹுமாயூன் மஹால், கலச மஹால், எழும்பூர் நீதிமன்றம் மற்றும் அருங்காட்சியகம், லிட்டில் தியேட்டர், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் பொதுப்பணித் துறை தலைமை அலுவலகம் ஆகிய கட்டடங்கள் பொதுப்பணித் துறையால் புனரமைத்துப் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

சென்னை இராஜாஜி சாலையில் அமைந்துள்ள துணைப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகம் மற்றும் தங்க சாலையில் உள்ள அரசு மைய அச்சகம், கோயம்புத்தூரில் உள்ள ஆளுநர் மாளிகை மற்றும் குதிரைவண்டி நீதிமன்றம், சேலம் பழைய தொழிலாளர் நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (இராணி மங்கம்மாள் அரண்மனை) மற்றும் கொடைக்கானல் கோஹினூர் சேக் அப்துல்லா மாளிகை ஆகிய தொன்மையான கட்டடங்களைப் புதுப்பித்துப் பாதுகாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் அமைந்துள்ள 17 பாரம்பரிய கட்டடங்களை ரூபாய் 103.74 கோடி செலவில் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் மறுசீரமைக்கும் பணிகள் பொதுப்பணித் துறையின் மூலம் 2022–2023–ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் அமைந்துள்ள 8 பாரம்பரிய கட்டடங்களை

ரூபாய் 49.76 கோடி செலவில் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் மறுசீரமைக்கும் பணிகள் பொதுப்பணித் துறையின் மூலம் 2023–2024–ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 7.0. நினைவகங்கள் மற்றும் மண்டபங்கள்

விடுதலைப் போராட்ட வீரர்கள், அறிஞர் பெருமக்கள் மற்றும் மாபெரும் தலைவர்கள் போன்றோரை நினைவு கொள்ளும் வகையில் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் நினைவிடங்கள் / நினைவகங்கள் பொதுப்பணித் துறையால் அமைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இவ்வரசால் மேற்கொள்ளப்பட்ட சிறப்புக் கட்டுமான பணிகள்

- இந்திய சுதந்திரத்தின் வைர விழா நினைவைக் கொண்டாடும் நினைவாகச் சென்னையில் நினைவுத் தூண்
- திரு அயோத்திதாச பண்டிதர் மணிமண்டபம், காந்தி மண்டப வளாகம், கிண்டி, சென்னை
- முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நினைவகம், காமராஜர் சாலை, சென்னை

- மாயூரம் முன்சீப் வேதநாயகம் நினைவகம் மற்றும் திருவுருவச் சிலை, மயிலாடுதுறை, மயிலாடுதுறை மாவட்டம்
- தளி பாளையக்காரர் நினைவகம் மற்றும் திருவுருவச் சிலை, உடுமலைப்பேட்டை திருப்பூர் மாவட்டம்
- தியாகி ஐயா திரு.எம்.ஏ.ஈஸ்வரன் நினைவகம் மற்றும் திருவுருவச் சிலை, பவானிசாகர், ஈரோடு மாவட்டம்
- திரு. A.கோவிந்தசாமி நினைவகம் மற்றும் திருவுருவச் சிலை விழுப்புரம் மாவட்டம்
- டாக்டர்.P.சுப்பராயன் நினைவகம் மற்றும் திருவுருவச் சிலை நாமக்கல் மாவட்டம்
- வள்ளுவர் கோட்டத்தை மறுசீரமைக்கும் பணி, சென்னை

## 8.0. துறை வாரியான கட்டடப் பணிகள்

### 8.1 . கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் கால்நடை மருத்துவமனைகள், கால்நடை மருந்தகங்கள்,

கால்நடை சிகிச்சை மையம் மற்றும் கால்நடை நோய்ப் புலனாய்வு பிரிவு கட்டடங்கள் பொதுப்பணித் துறையினால் கட்டப்பட்டு வருகின்றன.

சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சி மற்றும் விலங்கியல் அறிவியலுக்கான நவீன நிறுவனம் அமைப்பதற்காக மொத்தம் ரூ.203.78 கோடி மதிப்பீட்டில் 10 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.79.16 கோடி மதிப்பீட்டில் 115 பணிகளில் கால்நடை மருந்தகங்கள், கால்நடை மருத்துவமனை, கால்நடை சிகிச்சை மையம் மற்றும் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு கட்டடங்கள் போன்ற கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.40.15 கோடி மதிப்பிலான 49 பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.4.65 கோடி மதிப்பீட்டிலான 7 கட்டுமானப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

### 8.2 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

பொதுப்பணித் துறையினால் மேற்கொள்ளப்பட்ட 510 கட்டடக் கட்டுமான மற்றும் சில பராமரிப்புப் பணிகள்:

- சூரிய ஆற்றல் அமைப்புடன் கூடிய விடுதிக் கட்டடங்கள்,

- சிறுபான்மையினர் நல விடுதிகள் சிறப்புப் பராமரிப்பு மற்றும் சீரமைக்கும் பணிகள்

- பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகள் சிறப்புப் பராமரிப்பு மற்றும் சீரமைக்கும் பணிகள்

- நபார்டு திட்டத்தின் கீழ் கள்ளர் தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், கூடுதல் கழிப்பறைகள், சுற்றுச்சுவர் மற்றும் ஆழ்துளைக் கிணறு பணிகள்

- வக்பு வாரியம் மண்டல அலுவலகக் கட்டடங்கள்

- சிறுபான்மையினர் நல விடுதி கட்டடங்களில் சிறப்புப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள்

- கள்ளர் பள்ளிகளில் சிறப்புப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள்

399 பணிகள் ரூ.112.16 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. 43 பணிகள் ரூ.82.13 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. ரூ.10.90 கோடி மதிப்பீட்டில் 68 பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## 8.3. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

கூட்டுறவு வங்கி, ஒருங்கிணைந்த கூட்டுறவு பெருந்திட்ட வளாகம் மற்றும் கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தின் கட்டுமானப் பணிகள் பயன்பாட்டுத் துறையின் கோரிக்கையின் பேரில் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள ஆத்தூர் வட்டத்தில் ரூ.75.75 கோடி மதிப்பீட்டில் புதிய கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டத்தில் உள்ள மன்னவனூர் கிராமத்தில் தேசிய அளவிலான கூட்டுறவு ஆய்வுகள், ஆராய்ச்சி மற்றும்

பயிற்சி நிறுவனத்திற்கு ரூ.126 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டும் பணிக்கு பணித்தளம் ஒப்படைக்கப்பட்ட பின்பு மேற்கொள்ளப்படும்.

## 8.4. **வணிகவரி மற்றும் பதிவுத் துறை**

வணிகவரி அலுவலகங்கள், ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகங்கள், ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலகங்கள் மற்றும் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் கட்டுமானம் மற்றும் அவற்றின் பராமரிப்புப் பணிகள், பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம், பதிவுத் துறையின் பாரம்பரியக் கட்டடத்தினைப் புதுப்பிக்கும் பணி, ஒருங்கிணைந்த சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி, ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகம் மற்றும் துணைப் பதிவுத் துறைத் தலைவர் முகாம் அலுவலகக் கட்டடம், மாவட்டப் பதிவாளர் அலுவலகம் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலகம் கட்டுதல்

போன்ற ரூ.206.74 கோடி மதிப்பீட்டிலான 82 கட்டடப் பணிகளில், ரூ.60.12 கோடி மதிப்பீட்டிலான 16 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, ரூ.122.64 கோடி மதிப்பீட்டிலான 55 பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.23.98 கோடி மதிப்பீட்டிலான 11 பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

## 8.5. சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், வனத் துறை சார்ந்த கட்டடங்களான, வனத் துறை தலைமை அலுவலகம், ஆய்வகம் போன்ற கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சேலம் மாவட்டம், தளவாய்ப்பட்டியில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் மற்றும் ஆய்வகக் கூடம் கட்டும் பணி ரூ.6.42 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

## 8.6 மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை

உதகமண்டலத்தில் புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கட்டடம், கல்லூரி கட்டடம் மற்றும் குடியிருப்புக் கட்டடம் ரூ. 461.18 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

ஜப்பான் நாட்டு நிதி உதவியுடன் சர்வதேசத் தரத்தில் சென்னை, கோவை, மதுரை ஆகிய 3 புதிய மூன்றாம் நிலை பராமரிப்பு மருத்துவமனை கட்டடங்கள் மற்றும் திருவள்ளூர், சேலம், திருப்பூர், திருநெல்வேலி ஆகிய 4 புதிய இரண்டாம் நிலை மருத்துவமனை கட்டடங்களின் புதிய கட்டுமானப் பணிகள் சர்வதேசத் தரத்தில் ரூ. 615.06 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. 3 புதிய இரண்டாம் நிலை பராமரிப்பு மருத்துவமனை கட்டடங்கள் மற்றும் 2 புதிய மூன்றாம் நிலை பராமரிப்பு மருத்துவமனை கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1 இரண்டாம் நிலை பராமரிப்பு மருத்துவமனை கட்டடம் மற்றும் 1 மூன்றாம் நிலை பராமரிப்பு மருத்துவமனை கட்டடப் பணிகள் விரைவில்

கட்டி முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

ரூ.140.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் பின்வரும் பிற மருத்துவ கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவை

- மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் வெளிநோயாளி பிரிவு, சிறுநீரக சிகிச்சைப் பிரிவு மற்றும் கண் சிகிச்சைப் பிரிவு கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டன.
- ஈரோடு மாவட்டம் ஈரோட்டில் அரசு தலைமை மருத்துவமனையில் உயர் சிறப்பு மருத்துவமனை கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டன.
- சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள அரசு கஸ்தூரிபா காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் ஏற்கனவே உள்ள (தரைதளம்+3) தளத்தின் மேல் கூடுதல் தளங்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டன.
- புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டையில் புதிய அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 8.6.1 தேசிய சுகாதார திட்டம் (National Health Mission)

தமிழ்நாட்டில் தேசிய சுகாதார திட்ட நிதியின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப்பிரிவு கட்டடங்கள், ஒருங்கிணைந்த அவசர பேறுகாலக் குழந்தைகள் நலப்பிரிவு, பச்சிளங்குழந்தைகள் நலமையம், செவிலியர் குடியிருப்பு, புறநோயாளிகள் பிரிவு மற்றும் அவசரகால சிகிச்சைப் பிரிவு கட்டடங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் புதிய மாவட்டத் தலைமை மருத்துவமனை அமைத்தல் திட்டத்தின் கீழ் ரூ.856.85 கோடி மதிப்பீட்டில் ஜெயங்கொண்டான், தாம்பரம், பழனி, திருக்கோவிலூர், கரூர், ஓசூர், மயிலாடுதுறை, வேதாரண்யம், இராசிபுரம், அறந்தாங்கி, பரமக்குடி, கூடலூர், திருத்தணி, வள்ளியூர். திருப்பத்தூர், காங்கேயம், குடியாத்தம், திண்டிவனம் மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய 19 அரசு

மருத்துவமனைகளைத் தரம் உயர்த்தும், பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில் மருத்துவமனைகளை மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் ரூ. 142.00 கோடி மதிப்பீட்டில் குளித்தலை, திருச்செங்கோடு, அம்பாசமுத்திரம், தாராபுரம் மற்றும் இராஜபாளையம் ஆகிய 5 அரசு மருத்துவமனைகளின் கட்டமைப்புகளை மாவட்ட மருத்துவமனைகளுக்கு இணையாக மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தாம்பரம், சைதாப்பேட்டை, பொள்ளாச்சி, சிதம்பரம், பழனி, உசிலம்பட்டி, செய்யாறு, வள்ளியூர், மணப்பாறை, மேட்டூர், திருத்தணி மற்றும் திருப்பத்தூர் ஆகிய 12 மாவட்ட அரசு மருத்துவமனைகளில் ரூ. 15.00 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வகம் அமைக்கும் பணிகளில் 6 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

5 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. பழனியில் பணி தொடங்கப்படவுள்ளது.

சென்னை கீழ்ப்பாக்கத்தில் தமிழ்நாடு மனநல மற்றும் நரம்பியல் (TNIMHANS) ஒப்புயர்வு மையக் கட்டடம் கட்டும் பணி ரூ. 35.00 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22.12.2022 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு நடைபெற்று வருகின்றது.

சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சைதாப்பேட்டை அரசு மருத்துவமனை, சென்னை கஸ்தூரிபா காந்தி மகப்பேறு மருத்துவமனை, ஆர்.எஸ்.ஆர்.எம். அரசு மருத்துவமனை, திருவண்ணாமலை அரசு மருத்துவமனை, தஞ்சாவூர் இராஜாமிராசுதார் அரசு மருத்துவமனை, லால்குடி அரசு மருத்துவமனை, சிதம்பரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அரசு மருத்துவமனை பட்டுக்கோட்டை, கம்பம், பென்னாகரம், மணப்பாறை, தண்டையார்பேட்டை, துறையூர் மற்றும் அவிநாசி ஆகிய மருத்துவமனைகளில் புதிய தாய் சேய் நல கட்டடம்

ரூ.182.30 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அரசு மருத்துவமனை திண்டிவனம், தாம்பரம், திருவில்லிபுத்தூர், கோபிசெட்டிப்பாளையம், அம்பாசமுத்திரம் மற்றும் தென்காசி ஆகிய இடங்களில் ரூ.41.34 கோடி மதிப்பீட்டில் 6 புதிய தாய்சேய் நல கட்டடங்கள் கட்டும் பணிகளில், 4 பணிகள் முடிக்கப்பட்டன மற்றும் 2 பணிகள் நடைபெற்று வருகின்றன.

தஞ்சாவூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு, சிவகங்கை, திருவாரூர் மற்றும் தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் கடலூர், ஊத்தங்கரை, மேலூர், சீர்காழி, ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனைகளில் அவசரகாலச் சிகிச்சை கவனிப்பு மருத்துவமனை கட்டடங்கள் ரூ. 214.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில் 25 அரசு மருத்துவமனைகளில் பச்சிளங் குழந்தைகளின் செவித்திறன் கண்டறிவதற்காக, ஒலி

புகா அறை அமைக்கும் பணிக்கு ரூபாய் 3.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டன.

மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் இயங்கும் குழந்தைகள் நல ஆராய்ச்சி மையம் பிரத்யேகமாக 400 படுக்கை வசதிகளுடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் நல ஒப்புயர்வு மையமாக மேம்படுத்தும் பணிக்கு ரூ. 20.00 கோடி மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகின்றது.

ஓட்டேரி, கீழ்ப்பாக்கம், கன்னியாகுமரி மற்றும் சிதம்பரம் ஆகிய 4 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் தலா 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு ரூபாய் 80.00 கோடி மதிப்பீட்டில், 3 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 1 பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது.

பரமத்தி வேலூர், அரக்கோணம், சிவகாசி, அரூர் மற்றும் உளுந்தூர்பேட்டை ஆகிய 5 அரசு மருத்துவமனைகளில் 50 படுக்கைகள் கொண்ட பன்னோக்கு தீவிர சிகிச்சைப் பிரிவுகள் ரூபாய் 100.00 கோடி மதிப்பீட்டில், 3 பணிகள்

நடைபெற்று வருகின்றன மற்றும் 2 பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு ரூ.40.05 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

கோவில்பட்டி, காஞ்சிபுரம், பாலக்கோடு, கோபிசெட்டிபாளையம், சீர்காழி, மன்னார்குடி, அரக்கோணம் மற்றும் குன்னூர் ஆகிய 8 அரசு மருத்துவமனைகளில் புதிய ஒருங்கிணைந்த ஆய்வகங்கள் ரூபாய் 10.00 கோடி மதிப்பீட்டில், 5 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 3 பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

திருக்கழுக்குன்றம், புவனகிரி, பாப்பிரெட்டிப்பட்டி, அரூர், சங்கராபுரம், வேடசந்தூர், அந்தியூர், குலசேகரம், குத்தாலம், பேராவூரணி, தண்டராம்பட்டு, வெம்பாக்கம், விளாத்திகுளம், ஜல்லிப்பட்டி, செஞ்சி மற்றும் திருபுவனம் ஆகிய 16 அரசு மருத்துவமனைகளுக்கு

புதிய கட்டடங்கள் ரூபாய் 80.00 கோடி மதிப்பீட்டில் 10 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 6 பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், 620 மாணவர்கள் தங்குவதற்கு ஏற்ப அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய மாணவியர் விடுதி கட்டும் பணி ரூபாய் 64.90 கோடி மதிப்பீட்டில் பணிகள் தொடங்கப்பட உள்ளது.

சென்னையில் உள்ள அரசு சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் கட்டும் பணி ரூ.5.09 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை கூடுதல் கட்டடங்கள் கட்டும் பணி ரூபாய் 9.00 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட உள்ளது.

மதுரை மாவட்டம், பாலரெங்காபுரம் அரசு புற்றுநோய் மருத்துவமனை மேம்படுத்தும் பணி ரூபாய் 4.61 கோடி மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகின்றது.

திருவாரூர் மாவட்டம், விஜயபுரம் அரசு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு புதிய கட்டடம் அமைக்கும் பணி ரூபாய் 6.00 கோடி மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகின்றது.

7 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் 8 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் நவீன வசதிகளுடன் சிகிச்சை பெற கட்டணப் படுக்கைகள் (Pay Ward) அமைக்கும் பணிக்கு ரூபாய் 12.00 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில்,

- 7 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், 1 பணி முடிவுற்றது மற்றும் 6 பணிகள் நடைபெற்று வருகின்றன.
- 8 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளான பொள்ளாச்சி, கடலூர், ஈரோடு, காஞ்சிபுரம், கும்பகோணம், தென்காசி, கோவில்பட்டி மற்றும் பெரம்பலூர் ஆகியவற்றில் 1 பணி

முடிவுற்றுள்ளது. 7 பணிகள் நடைபெற்று வருகின்றன.

மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய 4 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பன்னோக்கு பல் மருத்துவ நிலையம் அமைக்கும் பணி ரூ.4.49 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட உள்ளன. 4 பணிகளில், மதுரை பணி முடிவுற்றது. கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் சேலம் பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது.

### 8.6.2 தமிழ்நாடு சுகாதார அமைப்பு சீர்திருத்தத் திட்டம் (Tamil Nadu Health System Reform Program)

காஞ்சிபுரம் மாவட்டம், காரப்பேட்டையில் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் மூன்றாம் நான்காம் மற்றும் ஐந்தாம் தளங்கள் ரூ.100.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

சென்னை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிய கட்டடப் பணி

ரூ. 125.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

சென்னை பெரியார் நகர் புறநகர் மருத்துவமனையில் கூடுதல் கட்டடங்கள் கட்டும் பணிகள் ரூ. 55.07 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில், புதிய நரம்பியல் பிரிவு கட்டடம் கட்டும் பணி ரூ. 60.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

மேலும் உத்திரமேரூர், திருப்பத்தூர், சாத்தூர், வந்தவாசி, செங்கம், பாலக்கோடு, விருத்தாச்சலம், ஏற்காடு, களக்காடு, இராஜதானி, உத்தமபாளையம், பெரியகுளம் மற்றும் திருமயம் ஆகிய இடங்களில் மருத்துவமனை கட்டடங்கள் **ரூ.45.18 கோடி** மதிப்பீட்டிலான பணிகளில் 5 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 8 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கான புதிய கட்டடம் கட்டும் பணி ரூ. 3.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

கொடைக்கானல், அரசு மருத்துவமனையில் உள்ள உடற்கூறாய்வு கட்டடங்கள் மேம்படுத்தும் பணிகள் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டது.

அரசு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கண் மருத்துவப் பிரிவுக்கான கூடுதல் தளம் கட்டும் பணி ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள மருத்துவ அலுவலர் மற்றும் பணியாளர் செவிலியர் குடியிருப்புகளைச் சீரமைக்கும் பணி ரூ.23.50 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டது.

கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நீராவி சலவை வசதி ஏற்படுத்தும்

பணி ரூ.2.45 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் பன்னோக்கு உயர் சிறப்பு சிகிச்சை பிரிவு கட்டடம் அமைக்கும் பணி ரூ.53 கோடி மதிப்பீட்டில் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

திருச்சி மாவட்டத்தில் உள்ள மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் விரிவான சிறப்பு சிகிச்சை பிரிவு கட்டடம் கட்டும் பணி ரூ.110 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

சென்னையில் உள்ள ஸ்டான்லி மருத்துவமனையில், ரூ.147 கோடி மதிப்பீட்டில் புதிய உயர் சிறப்பு தீவிர மற்றும் அவசர சிகிச்சை பிரிவு (தரைத்தளம்+6 மாடிகள்) கட்டும் பணி மற்றும் விடுதி கட்டடப் பணிகள் தொடங்கப்பட உள்ளன மற்றும் நர்சிங் பள்ளியின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றது.

சென்னை சைதாப்பேட்டையில் உள்ள அரசு புறநகர் மருத்துவமனையில் புதிய மகப்பேறு குழந்தைகள் நல மருத்துவமனை கட்டடத்தின் இரண்டாம் தளத்தின் மேல் கூடுதல் தளங்கள் (மூன்றாவது தளம் – பகுதி, நான்காவது முதல் ஆறாவது தளம் வரை) கட்டும் பணிகள் ரூ. 15.50 கோடியில் நடைபெற்று வருகின்றது.

சென்னை தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் இரண்டாவது தளத்தின் மீது 3, 4, 5 மற்றும் 6வது தளங்கள் கட்டும் பணிகள் ரூ. 56.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

சென்னை பெரியார் நகரில் அரசு புறநகர் மருத்துவமனைக்கான புதிய கட்டடத்தில் கூடுதல் 4வது, 5வது மற்றும் 6வது தளங்கள் கட்டும் பணி ரூ.54.82 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

### 8.6.3 பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம் யோஜனா (PMJVK) பணிகள்

பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம் யோஜனா (PMJVK) திட்டத்தின் கீழ் பேர்ணாம்பட்டு, வாணியம்பாடி, ஆம்பூர், திருச்செந்தூர், காயல்பட்டினம், தூத்துக்குடி,

தென்காசி, மேலப்பாளையம், திருநெல்வேலி, சிங்காவனம், அம்மாபட்டினம் மற்றும் கோட்டைப் பட்டினம் ஆகிய இடங்களில் மருத்துவமனைகள் கட்டும் பணிகள் ரூ.396.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

வேலூர் மாவட்டம், வேலூரில் உள்ள அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனையில் பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டடம் கட்டும் பணி (பிளாக் I, II மற்றும் III) ரூ. 197.81 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

### 8.7. மனிதவள மேலாண்மைத் துறை

சென்னை, அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரி வளாகத்தில் கூடுதல் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி ரூ.3.48 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

### 8.8 தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை

புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் மொத்தம் ரூ. 9 கோடி மதிப்பீட்டிலான 3 கட்டடக் கட்டுமானப் பணிகளில், 2 இடங்களில் ரூ.4 கோடி மதிப்பீட்டில்

பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.5 கோடி மதிப்பீட்டில் 1 பணி நடைபெற்று வருகின்றது.

## 8.9 நீதித் துறை

நீதித்துறை சார்ந்த அனைத்து வகையான கட்டடப் பணிகளான நீதிமன்றக் கட்டடங்கள் / ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள், குடியிருப்புக் கட்டடங்கள், பாதிக்கப் படக்கூடிய சாட்சிகள் மற்றும் சிறார் சாட்சிகள் (Vulnerable Witness and Child Deposition Centre Buildings) விசாரிக்கும் கட்டடம், சிறார்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்கும் கட்டடம் (POCSO Building) மற்றும் மகளிர் நீதிமன்றக் கட்டடங்கள் (Mahila court buildings) ஆகியவை பொதுப்பணித் துறையினால் கட்டப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

ரூ.458.32 கோடி மதிப்பீட்டிலான ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடங்கள் மற்றும் நீதியரசர்கள் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுவதற்கான 36 கட்டுமானப் பணிகளில், 12 இடங்களில் ரூ.103.96 கோடி மதிப்பீட்டில் பணிகள்

முடிக்கப்பட்டுள்ளன. ரூ.309.33 கோடி மதிப்பீட்டில் 22 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 2 இடங்களில் ரூ.45.03 கோடி மதிப்பீட்டில் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## 8.10. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறைக்குட்பட்ட ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலகங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் விடுதிகள் கட்டுதல் மற்றும் அதன் பராமரிப்புப் பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறையில் ரூ.362.36 கோடி மதிப்பீட்டிலான 114 கட்டுமானப் பணிகளில், 77 பணிகள் ரூ.285.61 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.76.75 கோடி மதிப்பீட்டிலான 37 பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 8.11. சட்டத் துறை

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும், தேவையான சட்டக் கல்லூரிகள் மற்றும் விடுதிகள் கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது ரூ.535.45 கோடி மதிப்பீட்டில் 9 சட்டக் கல்லூரிகள் மற்றும் விடுதிகள் கட்டும் பணிகளில், ரூ.224.70 கோடி மதிப்பீட்டில் 4 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.310.75 கோடி மதிப்பீட்டில் 5 பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 8.12. பொது (தேர்தல்) துறை

தமிழ்நாட்டில், 31 மாவட்டங்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்ளைப் பாதுகாத்து வைப்பதற்குத் தேவையான பாதுகாப்புக் கிடங்குகள் கட்டும் பணிகள் பொதுப்பணித் துறையால் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

மேலும் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களைப் பாதுகாத்து

வைப்பதற்கு தேவையான கிடங்குகள் கட்டுவதற்கான பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

## 8.13. பொதுப்பணித் துறை

பொதுப்பணித் துறையில் 70 கட்டுமானப் பணிகளின் மதிப்பீடு ரூ.702.92 கோடி, அதில் ரூ.149.56 கோடி மதிப்பீட்டில் 25 பணிகள் முடிக்கப்பட்டன. 41 பணிகள் ரூ.531.06 கோடியில் நடைபெற்று வருகின்றன. 4 பணிகள் ரூ.22.30 கோடியில் மேற்கொள்ளப்படவுள்ளன.

**முடிக்கப்பட்ட பணிகளின் விவரங்கள் :**

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | சென்னை, சேப்பாக்கம் பொதுப்பணித் துறை வளாகத்தில் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை மண்டலம் அலுவலகம் கட்டும் பணி | 23.05 |
| 2. | நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் அரசு அலுவலர்களுக்கான 50 குடியிருப்புகள் கட்டும் பணி | 11.87 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 3. | திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூரில் சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டும் பணி | 6. 98 |
| 4. | திருச்சி மாவட்டம், திருச்சியில் தலைமைப் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணி | 2. 84 |
| 5. | திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் மேலும் ஒரு புதிய சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டும் பணி | 3.26 |
| 6. | திருவண்ணாமலை மாவட்டம், ஜமுனாமரத்தூரில் மேலும் ஒரு புதிய சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டும் பணி | 2.99 |
| 7. | கடலூர் மாவட்டம், கடலூரில் பொதுப்பணித் துறை கோட்ட அலுவலகம் மற்றும் 3 உபகோட்ட அலுவலகம் மற்றும் 5 பிரிவு அலுவக கட்டடம் கட்டும் பணிகள் | 4.43 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 8. | தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடியில் பொதுப்பணித் துறை வளாகத்தில் உபகோட்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி | 0.40 |
| 9. | திருவாரூர் மாவட்டம், திருவாரூரில் பொறியாளர்களுக்கான புதிய குடியிருப்புகள் கட்டும் பணி | 0.99 |
| 10 | இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப்பேட்டையில் சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டும் பணி | 6 .92 |
| 11 | செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டில் சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டும் பணி | 6 .79 |
| 12 | சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் உதவி செயற்பொறியாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி | 0.93 |
| 13 | சென்னை மாவட்டம் தரமணியில் பொதுப்பணித் துறை வளாகத்தில் மழைநீர் வடிகால் மேம்படுத்தும் பணிகள், மற்றும் உட்புறச் சாலைகள், சுற்றுச் சுவர் மேம்படுத்தும் பணிகள் | 4.67 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 14 | மதுரை மாவட்டம், மதுரையில் சுற்றுலா மாளிகை கட்டடம் மேம்படுத்தும் பணி | 4.49 |
| 15 | சென்னை சேப்பாக்கம் பொதுப்பணித் துறை வளாகத்தில் பணிபுரியும் மகளிருக்கான உணவருந்தும் கூடம் கட்டும் பணி | 0.68 |
| 16 | கள்ளக்குறிச்சி மாவட்டம் கள்ளக்குறிச்சியில் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி | 2.73 |
| 17 | திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை பெருந்திட்ட வளாகத்தில் கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டும் பணி | 8.32 |
| 18 | வேலூர் மாவட்டம் வேலூரில் கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டும் பணி | 7.64 |
| 19 | திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடியில் புதிய பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகைக் கட்டடம் கட்டும் பணி | 1.69 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 20 | விருதுநகர் மாவட்டம், சாத்தூரில் சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டும் பணி | 2.43 |
| | **பாரம்பரிய கட்டடங்கள்** | |
| 21 | சென்னை, சேப்பாக்கத்தில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட பாரம்பரியமிக்க புராதன கட்டடமான ஹுமாயூன் மஹாலை புனரமைக்கும் பணி | 41.12 |
| 22 | திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் உள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் (பழைய நீதிமன்றக் கட்டடம்) | 1.38 |
| 23 | புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக பாரம்பரிய கட்டடத்தை பாதுகாத்தல் புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் | 1.46 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 24 | கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் உள்ள பழமை வாய்ந்த கூட்டுறவு வங்கி பாரம்பரிய கட்டடத்தை பாதுகாத்தல் புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் | 1.21 |
| 25 | கன்னியாகுமரி மாவட்டம், பாலாமொர் ஆய்வு மாளிகையின் பாரம்பரிய கட்டடத்தை பாதுகாத்தல் புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் | 0.29 |

## நடைபெற்று வரும் பணிகளின் விவரம் :–

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1. | நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினத்தில் சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டும் பணி | 3.69 |
| 2. | சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டையில் பணிமனையில் 9 பிளாக்குகளில் 54 வீடுகளைப் புனரமைக்கும் பணிகள் | 1.33 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 3. | சென்னை மாவட்டம், தலைமைச் செயலகத்தில் நவீனப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள், இருக்கைகள் மற்றும் கணினிகள் மற்றும் மென்பொருள்கள் வாங்கும் பணிகள் | 0.82 |
| 4. | மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறையில் அரசு சுற்றுலா மாளிகைக் கட்டடம் கட்டும் பணி | 6.48 |
| 5. | கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சியில் புதிய சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டும் பணி | 7.00 |
| 6. | சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் புதிய "சி" வகை அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணி | 100.00 |
| 7. | திருச்சி மாவட்டம், திருச்சியில் அரசுப் பணியாளர் பயிற்சி நிலையத்தில் நவீன வகுப்பறை, கூடுதல் அறைகள் மற்றும் இருக்கை வசதிகள் மற்றும் மேம்படுத்துதல் பணி | 1.00 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 8. | நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் அரசு அலுவலர்களுக்கான 16 குடியிருப்புகள் கட்டும் பணி<br><br>'பி' வகை – 4 குடியிருப்புகள்<br>'சி' வகை – 8 குடியிருப்புகள்<br>'டி' வகை – 4 குடியிருப்புகள் | 5.21 |
| 9. | சென்னை மாவட்டம், சைதாப்பேட்டையில் உள்ள தாடண்டர் நகரில் 'பி வகை' அடுக்கு மாடி குடியிருப்பு கட்டும் பணி | 88.49 |
| 10. | சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை தாடண்டர்நகரில் அரசு ஊழியர்களுக்கான வாடகை குடியிருப்புகள் வளாகத்தில் சாலை மற்றும் பிற கூடுதல் வசதிகள் ஏற்படுத்தித்தருதல் | 23.49 |
| 11. | சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் புதிய "சி" வகை அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணி | 103.00 |
| | **பாரம்பரிய கட்டடங்கள்** | |
| 12. | சென்னை, பழைய தங்க சாலையில் உள்ள அரசு அச்சக கட்டடத்தை பாதுகாத்தல் புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் | 13.99 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 13. | புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில் தற்போதைய வட்டாட்சியர் அலுவலகம் | 3.43 |
| 14. | திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (இராணி மங்கம்மாள் அரண்மனை) | 9.40 |
| 15. | மதுரை மாவட்டம், பெரியார் வைகை வடிநில வட்டம், நீர்வளத் துறை கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம் (இராணி மங்கம்மாள் அரண்மனை) | 1.98 |
| 16. | நாகப்பட்டினத்தில் உள்ள மாவட்ட நீதிமன்றம் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் | 7.90 |
| 17. | கோயம்புத்தூரில் உள்ள ஆளுநர் மாளிகை (பழைய வனத்துறை அலுவலகம்) | 10.25 |
| 18. | கடலூரில் உள்ள ஆட்சியர் முகாம் அலுவலகக் கட்டடம் (கிளைவ் ஹவுஸ்) | 3.12 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 19. | திருச்சிராப்பள்ளி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள துணை நீதிமன்றத்திற்கான பழைய ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் | 3.85 |
| 20. | திருச்சிராப்பள்ளி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள பழைய முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற கட்டடம் | 4.70 |
| 21. | ராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபம் முகாமில் உள்ள காலனி பங்களா பாரம்பரிய கட்டடம் | 2.20 |
| 22. | ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் உள்ள பழமையான ஜூடிசியல் மாஜிஸ்திரேட் நீதிமன்ற பாரம்பரிய கட்டடம் | 1.59 |
| 23. | தேனி மாவட்டம் பெரியகுளத்தில் உள்ள பழைய மாவட்ட முன்சிஃப் நீதிமன்ற பாரம்பரிய கட்டடம் | 1.80 |
| 24. | மதுரை மாவட்டம், சோழவந்தானில் உள்ள அரசன் சண்முகனார் அரசு மேல்நிலைப் பள்ளிக் கட்டடம் | 5.50 |
| 25. | கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் கைரேகை பதிவு மற்றும் பொருளாதார குற்றப்பிரிவு அலுவலகமாகத் தற்போது | 1.21 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| | செயல்பட்டு வரும் பாரம்பரிய கட்டடம் | |
| 26. | புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில் சத்தியமூர்த்தி மேல்நிலைப் பள்ளியாகத் தற்போது இயங்கி வரும் பாரம்பரிய கட்டடம் | 2.32 |
| 27. | தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் அரண்மனையில் உள்ள சாம்பாஜி ராஜா போன்ஸ்லே குடியிருப்பு பாரம்பரிய கட்டடம் (ஒரு பகுதி) | 3.86 |
| 28. | தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் அரண்மனையில் மூத்த இளவரசர் குடியிருப்பு (அருங்காட்சியகம் பகுதி) பாரம்பரிய கட்டடம் (ஒரு பகுதி) | 2.50 |
| 29. | கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூரில் உள்ள ராஜா சாலையில் உள்ள சிசிஎம்ஏ அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் பாரம்பரிய கட்டடம் (சிகப்பு கட்டடம்) | 7.60 |
| 30. | சென்னை, கிண்டியில் உள்ள கிங் நோய்த் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள முக்கிய நிர்வாகப் பாரம்பரிய கட்டடம் | 8.30 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 31. | சென்னை, சேப்பாக்க வளாகத்தில் உள்ள பழைய சம்பள கணக்கு அலுவலர், கிழக்கு பாரம்பரிய கட்டடம் மற்றும் பழைய வேளாண்மை துறை பதிவு அலுவலகம் பாரம்பரிய கட்டடம் | 23.08 |
| 32. | சென்னை, அரசு தோட்டத்தில் உள்ள ராஜாஜி மண்டபத்தின் பாரம்பரிய கட்டடம் | 17.00 |
| 33. | திருவண்ணாமலை மாவட்டம், பூசிமலை குப்பத்தில் உள்ள ஆரணி ஜாகீர் பூசிமலை குப்பம் அரண்மனை புராதன கட்டடம் | 11.54 |
| 34. | தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் அரண்மனையில் உள்ள மங்கள ராஜே மாடிக் குடியிருப்பின் பகுதி | 3.50 |
| 35. | சென்னை மனநலக் கழகத்தில் உள்ள பொழுதுபோக்கு அறை பாரம்பரிய கட்டடம் | 4.62 |
| 36. | சென்னை சேப்பாக்கத்தில் உள்ள பதிவுகள் (Record) கோபுரம் பாரம்பரிய கட்டடம் | 3.09 |

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 37. | சென்னை, கிண்டி கிங் நோய்த் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இணைப்பு கட்டடம் (ஊடக அறை) மற்றும் நிர்வாகத் தொகுதிக்கு அருகில் பாரம்பரிய கட்டடம் | 5.23 |
| 38. | கடலூர் மாவட்டம், கடலூரில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள பழைய மாவட்ட நீதிமன்ற பாரம்பரிய கட்டடம் | 3.19 |
| 39. | கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி நிறுவனத்தின் பாரம்பரிய கட்டடம் (கட்டடம் II – தெற்குப் பிரிவு) | 6.78 |
| 40. | புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டையில் உள்ள பொது அலுவலகக் கட்டடமாக தற்போது செயல்படும் பாரம்பரிய கட்டடம் | 14.92 |
| 41. | தஞ்சை மாவட்டம், திருவையாறில் பழைய மாவட்ட முன்சிஃப் நீதிமன்றத்தின் பாரம்பரிய கட்டடம் | 2.10 |

**நடைபெறவுள்ள பணிகளின் விவரம்:**

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1. | தென்காசி மாவட்டம், தென்காசியில் புதிய சுற்றுலா மாளிகை கட்டும் பணி | 7.05 |
| | **பாரம்பரிய கட்டடங்கள்** | |
| 2 | தருமபுரி மாவட்டம், ஹரூரில் ஜூடிசியல் மாஜிஸ்திரேட் நீதிமன்ற கட்டடமாகச் செயல்பட்டு வரும் பாரம்பரிய கட்டடம் | 2.23 |
| 3 | சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தாலுகாவில் உள்ள சங்கரபதி கோட்டையின் பாரம்பரிய கட்டமைப்பு | 9.04 |
| 4 | மதுரை மாவட்டத்தில் உள்ள மாவட்ட பதிவாளர் அலுவலக (தெற்கு) கட்டடத்தின் பாரம்பரிய கட்டடம் | 3.98 |

## 8.14. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

வருவாய்த் துறைக்குட்பட்ட கட்டடங்களான மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், வருவாய் கோட்டாட்சியர்

அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள், கிராம நிர்வாக அலுவலகம் மற்றும் குடியிருப்புகளின் கட்டுமானம் மற்றும் அதன் பராமரிப்புப் பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் ரூ.554.27 கோடி மதிப்பீட்டிலான 118 கட்டுமானப் பணிகளில் 57 பணிகள் ரூ.231.94 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. 58 பணிகள் ரூ.208.44 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. ரூ.113.89 கோடி மதிப்பீட்டில் 3 பணிகள் தொடங்கப்பட உள்ளன.

## 8.15 பள்ளிக் கல்வித் துறை

நன்கு காற்றோட்டமான வகுப்பறைகள், அவசரகால வெளியேறும் வழி, நவீன அறிவியல் ஆய்வகங்கள், பொது அறிவு மற்றும் கலாச்சாரத்தை வளர்க்கும் நூலகங்கள், அதிநவீன கணினி அறைகள், கலை

மற்றும் கைவினைப் பொருள்கள் அறைகள் மற்றும் பள்ளி வளாகத்தின் பாதுகாப்பு சுவர்கள் போன்ற பணிகள் தமிழ்நாட்டில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி வளாகங்களில் பொதுப்பணித் துறையால் கட்டப்பட்டு வருகின்றன.

பள்ளிக் கல்வித் துறையில் மேல்நிலை மற்றும் உயர்நிலை பள்ளிகளில் மொத்தம் ரூ.1644.89 கோடி மதிப்பீட்டிலான 3864 கட்டுமான பணிகளில், ரூ.362.31 கோடி மதிப்பீட்டிலான 1032 பணிகள் முடிவடைந்துள்ளன. 1469 பணிகள் ரூ.980.31 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. ரூ.302.27 கோடி மதிப்பீட்டில் 1363 பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளன.

**பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம் யோஜனா (PMJVK)**

புதுக்கோட்டை மாவட்டத்தில் PMJVK திட்டத்தின் கீழ் அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் அரசு உயர் பள்ளிகளில் அறிவியல் ஆய்வகம் மற்றும் நூலகக்

கூடம் கட்டும் பணி ரூ.6.27 கோடி. இதில் 2 பணிகள் ரூ.1.44 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன 7 பணிகள் ரூ.4.83 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

## 8.16. சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை

பணிக்குச் செல்லும் மகளிர் தங்கும் விடுதிகள், சமூக நலத் துறையின் அலுவலகக் கட்டடங்கள், சிறார்களுக்கான கூர்நோக்கு இல்லங்கள், சீர்திருத்த இல்லங்கள் ஆகிய கட்டடங்களின் கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையில் ரூ.65.75 கோடி மதிப்பீட்டிலான 6 கட்டுமானப் பணிகள் 2021–2022, 2022–2023 மற்றும் 2023–2024 ஆகிய நிதியாண்டுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில், ரூ.8.80 கோடி மதிப்பீட்டிலான 2 பணிகள் முடிக்கப்பட்டும், ரூ.42.95 கோடி மதிப்பீட்டிலான

2 பணிகள் நடைபெற்றும் வருகின்றன. 2 பணிகள் ரூ.14.00 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட உள்ளன.

## 8.17. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைக்குட்பட்ட நினைவகங்கள், நினைவு வளைவுகள், நினைவுத் தூண்கள், மணிமண்டபங்கள், சிலைகள் ஆகியவை பொதுப்பணித் துறையால் கட்டப்பட்டும், பராமரிக்கப்பட்டும் வருகின்றன. இவை தமிழ்நாட்டின் சிறந்த சுதந்திரப் போராட்ட வீரர்கள், தமிழ் மொழி தியாகிகள், வள்ளல்கள், அறிஞர்கள், கவிஞர்கள், இசை மேதைகள் மற்றும் தியாகிகள் ஆகியோர்களுக்கு பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

2021–2022, 2022–2023 மற்றும் 2023–2024 ஆகிய ஆண்டுகளில் சிலைகள் நிறுவுதல், புதிய நினைவகங்கள் கட்டுதல், ஏற்கனவே கட்டப்பட்ட நினைவகங்களை புனரமைத்தல் மற்றும் பழுதுபார்த்தல் பணிகள், நினைவுத்தூண் நிறுவுதல் மற்றும் தமிழ்நாடு அரசு டாக்டர் எம்.ஜி.ஆர் திரைப்படம்

மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தில் சிறப்பு பழுதுநீக்கம், சென்னை அரசு மைய அச்சகத்தில் Thermal CTP இயந்திரம் அமைக்க ஏதுவாக உள்கட்டமைப்புகள் ஏற்படுத்தும் பணி என ரூ.76 இலட்சத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், திருச்சி கிளை அச்சகத்திற்கு கூடுதல் கட்டடம், சென்னை அரசு மத்திய அச்சகத்தில் அமைந்துள்ள கோமாரி கட்டடத்தில் புதுப்பித்தல் மற்றும் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகள் என மொத்தம் ரூ.152.25 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

2021–2022, 2022–2023 மற்றும் 2023–2024 ஆகிய ஆண்டுகளில் சிலைகள் நிறுவுதல், புதிய நினைவகங்கள் கட்டுதல், ஏற்கனவே கட்டப்பட்ட நினைவகங்களைப் புனரமைத்தல் மற்றும் பழுதுபார்த்தல் பணிகள், நினைவுத்தூண் நிறுவுதல் மற்றும் தமிழ்நாடு அரசு டாக்டர் எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தில் சிறப்பு பழுதுநீக்கம், சென்னையில் உள்ள அரசு

எழுதுபொருள் அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் மற்றும் சிறப்புப் பழுதுபார்க்கும் பணி, சென்னை தண்டையார்பேட்டையில் அரசு மைய அச்சக அலுவலர்களுக்கு 96 குடியிருப்புகள் அமைக்கும் பணிகள் என மொத்தம் ரூ.171.29 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

மேலும், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள மன்னர் இராஜகோபால தொண்டைமான் அவர்களுக்கு அருங்காட்சியகத்துடன் கூடிய நூலகக் கட்டடம் மற்றும் ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் கொடிகாத்த குமரன் அவர்களுக்கு முழு உருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கும் பணிகள் ரூ.6.02 கோடி மதிப்பீட்டில் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

### 8.18. சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறை

அரசு இசைப் பள்ளிகள், அருங்காட்சியங்கள், முக்கிய திருக்கோயில்களில் பக்தர்கள் தங்கும் விடுதிகள்

ஆகியவை பொதுப்பணித் துறையால் கட்டப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறையில் ரூ.225.18 கோடி மதிப்பீட்டிலான 33 கட்டுமானப் பணிகளில், ரூ.71.52 கோடி மதிப்பீட்டிலான 9 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.147.09 கோடி மதிப்பீட்டிலான 22 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் ரூ.6.57 கோடி மதிப்பீட்டிலான 2 பணிகள் விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**8.19. போக்குவரத்துத் துறை**

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களுக்கும் போக்குவரத்துத் துறைக்குத் தேவையான மண்டல அலுவலகம், ஓட்டுநர் சோதனை தளம், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் போன்ற அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

போக்குவரத்துத் துறையில் மொத்தம் ரூ.51.92 கோடி மதிப்பீட்டில் 6 கட்டடங்கள் கட்டும் பணிகளில், ரூ.47.54 கோடி மதிப்பீட்டில் 5 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் ரூ.4.38 கோடி மதிப்பீட்டில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

**8.20. கருவூலம் மற்றும் கணக்குத் துறை**

கருவூலம் மற்றும் கணக்குத் துறைக்கு உட்பட்ட ஒருங்கிணைந்த கருவூல அலுவலகங்கள், சார்கருவூலங்கள் ஆகிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி மற்றும் அதன் பராமரிப்புப் பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கருவூலம் மற்றும் கணக்குத் துறையில் ரூ.5.68 கோடி மதிப்பீட்டிலான 6 கட்டுமானப் பணிகளில் ரூ.4.41 கோடி மதிப்பீட்டிலான 5 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.1.27 கோடி மதிப்பீட்டிலான 1 பணி நடைபெற்று வருகிறது.

## 8.21. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

ரூ.20.70 கோடி மதிப்பீட்டில் 3 பணிகளில்,

- சேலம் மாவட்டம், கொண்டப்ப நாயக்கன்பட்டியில் செவித்திறன் குறை உடையோருக்கான அரசு உயர்நிலைப் பள்ளிக்கு விடுதியுடன் கூடிய கட்டடம் கட்டும் பணி ரூ.6.70 கோடியில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- மேலும், மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் மனநலக் காப்பகம் மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற்பயிற்சி இல்லத்துடன் கூடிய மனநலக் காப்பகம் அமைக்கும் பணிகள் ரூ.14.00 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்படவுள்ளன.

## 8.22. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்குத் தேவையான விளையாட்டு அரங்கம், உள் விளையாட்டு அரங்கம், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தங்கும் விடுதிகள் மற்றும் நீச்சல் குளம் அமைத்தல் போன்ற கட்டுமானப்

பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ரூ.32.97 கோடி மதிப்பீட்டிலான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கட்டடங்கள் கட்டுவதற்கான 4 கட்டுமானப் பணிகளில், 3 இடங்களில் ரூ.28.35 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.4.62 கோடி மதிப்பீட்டில் 1 பணி நடைபெற்று வருகிறது.

## 9.0. முடிவுரை

அணுகத்தக்க மற்றும் பொறுப்பினை உள்ளடக்கிய நல்ல ஆட்சியினை வழங்குவதற்கு வசதியாக வலுவான பொது உள்கட்டமைப்புகள் உருவாக்குவதை இத்துறை உறுதி செய்யும்.

**எ. வ. வேலு**
**பொதுப்பணித் துறை அமைச்சர்**




**கலைஞர் நூற்றாண்டு நூலகம், மதுரை**



மதுரையில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.07.2023 அன்று திறந்து வைத்தார்.




**கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை, கிண்டி, சென்னை**



**சென்னை, கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.06.2023 அன்று திறந்து வைத்தார்.**




**கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம், மதுரை**




**மதுரை, அலங்காநல்லூரில் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.01.2024 அன்று திறந்து வைத்தார்.**



முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவிடம், சென்னை




**கலைஞர் உலகம்**




**சென்னையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.02.2024 அன்று திறந்து வைத்தார்.**




**மதுரையில் அரசு இராசாசி மருத்துவமனையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.02.2024 அன்று திறந்து வைத்தார்.**




**எம்.சி.ராஜா கல்லூரி மாணவர் விடுதி, சைதாப்பேட்டை, சென்னை-முகப்பு தோற்றம்**




**எம்.சி.ராஜா கல்லூரி மாணவர் விடுதி  கட்டடத்திற்கு 12.07.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**



திரு.வி.பி.சிங் முழு திருவுருவச்சிலை



**சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் திரு.வி.பி.சிங் அவர்களின் முழு திருவுருவச்சிலை 27.11.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.**




திராவிட பேரொளி பண்டிதர் அயோத்திதாசர் மணிமண்டபம்



சென்னை, கிண்டியில் திராவிட பேரொளி பண்டிதர் அயோத்திதாசர் மணிமண்டபத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 01.12.2023 அன்று திறந்து வைத்தார்.




**சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் அலுவலகக் கட்டடம், சேப்பாக்கம் சென்னை**




**சென்னை, சேப்பாக்கம் பொதுப்பணித்துறை வளாகத்தில் புதிய சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 02-02-2024 அன்று திறந்து வைத்தார்.**



மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மயிலாடுதுறை



மயிலாடுதுறை புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 04.03.2024 அன்று திறந்து வைத்தார்.

அரசு மைய அச்சகம், சென்னை—600 001.